# செயலாற்றுகை அறிக்கை

# 2015

## பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

# தொலை நோக்கு

**“இலங்கையிலுள்ள பொதுத் தொழில்முயற்சிகளின் சிறந்த நிர்வாகத்தை உறுதிப்படுத்தும் முக்கிய நிறுவனமாகத் திகழ்தல்”**

# எமது பணி

**“செயலாற்றுகையை உச்சப்படுத்தி பொது மக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான சிறந்த செயன்முறைகளின் ஊடாகப் பொதுத் தொழில்முயற்சிகளில் நிர்வாகத்தைப் பலப்படுத்துதல்”**

# உள்ளடக்கம்

**பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் செயலாற்றுகை ....................................1**

1. சுருக்க அறிமுகம்........................................................................................... 1

2. 2015 ஆம் ஆண்டில் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம் முன்னெடுத்த பிரதான செயற்பாடுகள் ........................................................................................... 2

3. பொதுத் தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் விடயப் பரப்பின் கீழ் உள்ள அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் பௌதிக செயலாற்றுகை.................................. 6

3.1 திறைசேரிக்கான பங்கிலாபங்களைச்/ தீர்வைகளைச் செலுத்துதல் ................................................6
3.2 அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளில் வேலைவாய்ப்பு ...................................................7
3.3 அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான வரவு செலவுத் திட்ட உதவி .........................7
3.4 உபாயமுறையில் முக்கியத்துவம் பெறுகின்ற அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் பற்றிய சுருக்கம் .............................................................................................8

**4. அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் செயலாற்றுகையை மேம்படுத்துவதில் பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் பங்களிப்பு .................8**

4.1 அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் செயலாற்றுகைகளை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தினால் செய்யப்பட்ட சிபாரிசுகள் ..... ………………8

**5. திணைக்களத்தின் ஊழியர்களுக்கு வலுவூட்டல்....................................................27**

**6. நிதி முகாமை……………………………………………………………………………30**

பின்னிணைப்பு I: ஆண்டறிக்கைகள் சமர்ப்பித்தல் – அ. சொ. வியாபாரத் தொழில்முயற்சிகள்………30
பின்னிணைப்பு II: அ.சொ. தொழில்முயற்சிகள் மூலமான தீர்வை/பங்கிலாப வருமானம்……………..32
பின்னிணைப்பு III: பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் விடயப் பரப்பின் கீழ் உள்ள அ.சொ. தொழில்முயற்சிகளுக்கான வரவு செலவுத் திட்ட உதவி……………………………………………………33
பின்னிணைப்பு IV: அ. சொ. 55 வியாபாரத் தொழில்முயற்சிகளின் 2015.12.31 இல் உள்ளவாறான நிதியியல் மொத்தவிளைவு…………………………………………………………………………...…35

# பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் செயலாற்றுகை

## 1. சுருக்க அறிமுகம்

அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளைக் கண்காணிப்பதற்காகவும் 1971 ஆம் 38 ஆம் இலக்கச் சட்டத்தின் பகுதி II ஐ நிர்வகிக்கப்பதற்காகவும் மேம்படுத்தப்பட்ட நிறுவன நிர்வாக முறையின் ஊடாக அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்காகவும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம் 2002 ஆம் ஆண்டில் மீள உருவாக்கப்பட்டது. இலங்கையில் தற்போது சுமார் 245 அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் காணப்படுகின்றன. அரசுக்குச் சொந்தமான சுமார் 127 தொழில்முயற்சிகள் பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் விடயப் பரப்பின் கீழ் உள்ள அதேவேளை மீதி 118 அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் வரவு செலவுத் திட்டத்தில் தங்கியுள்ளமையினால் அவை தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் விடயப் பரப்பின் கீழ் உள்ளன. பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் விடயப் பரப்பின் கீழ் காணப்படும் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளில் 55 நிறுவனங்கள் வர்த்தகச் செயற்பாடுகளில் அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. 2014 ஆம் ஆண்டில் 5,603 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட இந்த 55 அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் மொத்தச் சொத்துக்களினதும் பெறுமதி 2015 டிசம்பர் 31 ஆந் திகதியில் 10 சதவீதத்தால் அதிகரித்து 6,165 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. உபாயமுறையில் முக்கியத்துவம் பெறுகின்ற முதல் பத்து அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளான இலங்கை துறைமுக அதிகாரசபை, வ/ப (இலங்கை) விமான நிலைய, விமானப் போக்குவரத்துச் சேவைக் கம்பனி, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம், இலங்கை மின்சார சபை, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய

சேமிப்பு வங்கி, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் என்பவற்றின் சொத்துக்கள் அரசுக்குச் சொந்தமான 55 வியாபாரத் தொழில்முயற்சிகளின் சொத்துக்களில் 5,525 பில்லியன் ரூபாவாக அல்லது 89.6 சதவீதமாகக் காணப்படுகின்றன.

## 2. 2015 ஆம் ஆண்டில் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம் முன்னெடுத்த பிரதான செயற்பாடுகள்

### a) சுற்றறிக்கைகளையும் வழிகாட்டல்களுக்கான திருத்தங்களையும் வெளியிடுதல்

பொது தொழில்முயற்சிகள் திணைக்களம் பொதுத் தொழில்முயற்சிகளின் தொழிற்பாட்டு மற்றும் நிதி முகாமையுடன் தொடர்புடைய சுற்றறிக்கைகளை/ வழிகாட்டல்களை உருவாக்கி வெளியிடுவதில் தொடர்ச்சியாக ஈடுபட்டது. அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் நல்லாட்சியையும் நிதி ஒழுக்காற்றையும் உறுதிப்படுத்துவதற்காக தொடர்பாடல் வசதிகளையும், போக்குவரத்து வசதிகளையும் பணிப்பாளர் சபைகளுக்கு கொடுப்பனவுகளையும் வழங்குவது தொடர்பில் மூன்று சுற்றறிக்கைகளை இத்திணைக்களம் 2015 ஆம் ஆண்டில் வெளியிட்டது.

### b) பொதுத் தொழில்முயற்சிகள் குழுவின் செயன்முறைகளுக்கான உதவிகள்

2015 ஜனவரியில் நடாத்தப்பட்ட பொதுத் தேர்தலின் பின்னர் பொதுத் தொழில்முயற்சிகள் குழுவுக்கான புதிய குழுவொன்று 2015 ஆம் ஆண்டில் நியமிக்கப்படவில்லை. அதனால், இவ்வருடத்தில் பொதுத் தொழில்முயற்சிகள் குழு இயங்கவில்லை.எவ்வாறாயினும், 2014 ஆம் ஆண்டில் பொதுத் தொழில்முயற்சிகள் குழுவினால் வழங்கப்பட்ட பணிப்புரைகள்/சிபாரிசுகள் தொடர்பில் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளால் எடுக்கப்பட்ட பின்தொடர் நடவடிக்கைகளின் முன்னேற்றம் தொடர்பான கண்காணிப்புச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் பாராளுமன்றத்திற்கு ஆண்டறிக்கைகளைச் சமர்ப்பிப்பது தொடர்பில் பொது தொழில்முயற்சிகள்

திணைக்களம் மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொண்டது. விபரங்கள் பின்னிணைப்பு I இல் தரப்பட்டுள்ளன.

c) அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் கண்டறியப்பட்டுள்ள கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

d) பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள், அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் பங்குதாரர் கூட்டங்களில், வருடாந்த/அதிவிசேடப் பொதுக் கூட்டங்களில் திறைசேரியின் பிரதிநிதியாகப் பங்கேற்று அரசாங்கத்தின் கொள்கைத் திட்டத்திற்கு ஏற்ப அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்கான வழிகாட்டல்களை வழங்கினர்.

e) அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளில் நல்லாட்சி நடைமுறைகளைப் பேணி வரும் நோக்கில் கணக்காய்வாளர் நாயகத்தின் சிபாரிசின் அடிப்படையில் கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கு கணக்காய்வாளர்கள் நியமிக்கப்பட்டனர். அரசியலமைப்புக்கான 19 ஆவது திருத்தத்துடன் இணைந்த வகையில், அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் அனைத்தையும் கணக்காய்வாளர் நாயகம் கணக்காய்வு செய்வார். இந்த முன்னெடுப்பு 2016 ஆம் ஆண்டில் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும். இந்த வகையில், 2015 ஆம் ஆண்டில் சில கணக்காய்வுப் பணிகள் கணக்காய்வாளர் நாயகத்தின இணக்கப்பாட்டுடன் பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்ட கணக்காய்வுக் கம்பனிகளால் மேற்கொள்ளப்பட்டன.

f) நிதிச் சட்டம், நிதிப் பிரமாணங்கள் அல்லது பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கைகள் என்பவற்றுக்கு இணங்க தேவையான சந்தர்ப்பங்களில் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் செயற்பாடுகளுக்கும்

தொழிற்பாடுகளுக்கும் நிதி அமைச்சின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக பொது தொழில்முயற்சிகள் திணைக்களம் நிதி அமைச்சுடன் நெருங்கிய தொடர்பைப் பேணி வந்தது. அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை ஆழமாகப் பகுப்பாய்வு செய்து அரசாங்கத்தின் கொள்கைகளுக்கான அவற்றின் இணக்கப்பாட்டைக் கவனத்திற் கொண்டு பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தினால் நிதி அமைச்சுக்கு சிபாரிகள் செய்யப்பட்டன. இதில் மூலதனச் செலவினங்களுக்கான அதிகாரமளிப்பு, கடன்பெறுகை வரையறைகளை அதிகரித்தல், கட்டண மீளாய்வு போன்றவை உள்ளடங்கும்.

g) நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல்கள்/ சுற்றறிக்கைகள் மூலம் பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை வாகனங்களைக் கொள்வனவு செய்தல், வெளிநாட்டுப் பிரயாணங்கள், வரவு செலவுத் திட்ட ஏற்பாடுகள், காசு விடுவிப்புக்கள் என்பவற்றின் விடயத்தில் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கு அனுமதி வழங்குவதற்கு பொது தொழில்முயற்சிகள் திணைக்களம் பயன்படுத்தியது.

h) அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கு ஏற்புடையதாகும் வழிகாட்டல்கள் மற்றும் சட்ட ஏற்பாடுகளுடன் தொடர்புடை விளக்கங்களையும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம் வழங்கியது.

i) மீளாய்வுகள் மற்றும் கலந்துரையாடல் மூலம் சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்களில் திருத்தங்கள் செய்வதற்கான வசதி ஏற்பாடுகள் பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தினால் செய்யப்பட்டன.

j) கௌரவ நிதி அமைச்சர், திறைசேரியின் செயலாளர், திறைசேரியின் பிரதிச் செயலாளர் அல்லது பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் பணிப்பாளரால் சபையுடன் / சிரேஷ்ட முகாமைத்துவத்துடன் முன்னேற்ற மற்றும் செயலாற்றுகை மீளாய்வு, தொழிற்பாட்டுப் பிரச்சினைகள்

தொடர்பான கலந்துரையாடித் தீர்த்தல் போன்றவற்றுக்காகப் பல கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

k) பொது தொழில்முயற்சிகள் திணைக்களம், தனது விடயப் பரப்பின் கீழ் உள்ள அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுடன் தொடர்புடைய வகையில் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்களை ஆராய்ந்து பகுப்பாய்வு செய்து அமைச்சரவைக்குச் சமர்ப்பிப்பதற்குத் தேவையான அவதானிப்புக்களை முன்வைத்தது. அவற்றின் விபரம் வருமாறு:

**அட்டவணை 1: அமைச்சரவை அவதானிப்புக்கள் - ஒரு துறைவாரியான பகுப்பாய்வு**

| துறை | அமைச்சரவை அவதானிப்பு எண். |
|---|---|
| சக்தி | 17 |
| தறைமுகங்கள் | 22 |
| விமானபோக்குவரத்து | 7 |
| நீர் | 8 |
| பயனிகள் போக்குவரத்து | 11 |
| நிர்மானம் | 5 |
| கால்நடை | 5 |
| பெருந்தோட்டம் | 8 |
| புதுப்பிக்கக்க முடியாத வளங்கள் | 3 |
| சுகாதாரம் | 3 |
| ஊடகம் | 9 |
| சநதைப்படுத்தல், பகிர்வு | 7 |
| மீள்கட்டமைப்பு | 15 |
| மீன்பிடி | 4 |
| வங்கி | 2 |
| வியாபாரமல்லாத | 2 |
| மொத்தம் | **128** |

l) கூட்டு ஒப்பந்தங்கள் தொடர்பான பேச்சுவார்த்தைகளுக்காக உருவாக்கப்பட்ட குழுவுக்கு பொது தொழில்முயற்சிகள் திணைக்களம் வழிகாட்டல்களை வழங்கியது.

m) நிதி அமைச்சின் சார்பில் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளிடமிருந்து பங்கிலாபங்களும் தீர்வைகளும் அறவிடப்பட்டு இவ்வருடத்திற்கான வருமானக் கணக்கு தயாரிக்கப்பட்டது.

n) 2015 ஆம் ஆண்டில் அரச முதலீட்டுக் கணக்கு ஒருங்கிணைப்புச் செயன்முறையொன்று ஆரம்பிக்கப்பட்டு அனைத்து அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளிடமிருந்தும் அவற்றின் துணைக் கம்பனிகளிடமிருந்து தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

## 3. பொதுத் தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் விடயப் பரப்பின் கீழ் உள்ள அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் பௌதிக செயலாற்றுகை

### 3.1 திறைசேரிக்கான பங்கிலாபங்களைச்/ தீர்வைகளைச் செலுத்துதல்

அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் மூலம் வருமானம் சேகரிக்க வேண்டும் என்ற அரசாங்கத்தின் கொள்கைக்கு இணங்க, அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகள் அனைத்தும் தங்களது வருமானத்தில் 30 சதவீதத்தை அல்லது தங்களது உரிமையாண்மையின் 15 சதவீதத்தை வருடாந்தம் திறைசேரிக்குச் செலுத்துவது அவசியமாகும்.

அரசுக்குச் சொந்தமான 62 தொழில்முயற்சிகளில் 45 தொழில்முயற்சிகள் மாத்திரமே பங்கிலாபங்கள் மற்றும் தீர்வைகளின் ஊடாக 2015 ஆம் ஆண்டில் வரியல்லா வருமானத்திற்குப் பங்களிப்புச் செய்துள்ளன. அவற்றின் பங்களிப்பு 29.8 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இது 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 36 சதவீத வீழ்ச்சியாகும். பங்கிலாபங்கள் மற்றும் தீர்வைகளில் வீழ்ச்சி காணப்பட்ட போதிலும், அரசாங்க வங்கிகள், தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் என்பன மிகப்பெரிய பங்களிப்பாளர்களாகத் தொடர்ந்தும் இருந்து வருவதுடன், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம், இலங்கை மின்சார சபை, இலங்கை துறைமுக அதிகாரசபை என்பனவே பங்களிப்புச் செய்யாத மிகப்பெரிய மூன்று நிறுவனங்களாகத் தொடர்ந்தும் இருந்து வருகின்றன. அதற்கிணங்க, அரசாங்க

வங்கிகள், தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம் என்பன இவ்வருடத்தில் திறைசேரியின் பங்கிலாப மற்றும் தீர்வை வருமானத்திற்கு முறையே 38 மற்றும் 33 சதவீதங்களில் பங்களிப்புச் செய்துள்ளன. 2015 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட பங்கிலாபங்கள் மற்றும் தீர்வைகளின் பட்டியலொன்று பின்னிணைப்பு II இல் தரப்பட்டுள்ளது.

### 3.2 அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளில் வேலைவாய்ப்பு

2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் வேலைப் படை 2015 ஆம் ஆண்டில் 0.8 சதவீதத்தால் அதிகரித்து 237,811 ஆகக் காணப்பட்டது.

### 3.3 அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான வரவு செலவுத் திட்ட உதவி

அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான வரவு செலவுத்திட்டத்தின் மூலமான மாற்றல்கள் முதலீடுகளின் வாயிலாக மேற்கொள்ளப்படுகின்றன. இது 95 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. மேலும், மீள்கட்டமைத்தல், வியாபாரச் செயற்பாடுகளை விரிவுபடுத்துதல் நோக்கங்களுக்கான மாற்றல்களாகவும் சம்பளங்கள் மற்றும் வேதனங்கள், தொழில்நுட்ப அறிவைப் பெறுதல் மற்றும் மூலப்பொருட்களுக்கான கொடுப்பனவுகளாகவும் அரசுக்குச் சொந்தமான 8 வியாபாரத் தொழில்முயற்சிகளுக்கு 2015 ஆம் ஆண்டில் 19 பில்லியன் ரூபா திறைசேரியினால் வழங்கப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டில் அரசுக்குச் சொந்தமான 12 தொழில்முயற்சிகளுக்கு வரவு செலவுத் திட்ட உதவியாக 94 பில்லியன் ரூபா வழங்கப்பட்டதுடன், 2014 ஆம் ஆண்டில் அரசுக்குச் சொந்தமான 30 தொழில்முயற்சிகளுக்கு வரவு செலவுத் திட்ட உதவியாக 126 பில்லியன் ரூபா வழங்கப்பட்டிருந்தது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இது 24 சதவீத அதிகரிப்பாகும். பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் விடயப் பரப்பின் கீழ் உள்ள, வரவு செலவுத் திட்ட உதவி வழங்கப்பட்ட அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் பட்டியலொன்று பின்னிணைப்பு III இல் தரப்பட்டுள்ளது.

### 3.4 உபாயமுறையில் முக்கியத்துவம் பெறுகின்ற அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் பற்றிய சுருக்கம்

பொது தொழில்முயற்சிகள் திணைக்களம், அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளிடமிருந்து பருவ கால அடிப்படையில் நிதித் தகவல்களைச் சேகரித்து பகுப்பாய்வு செய்து பெறப்பட்ட பெறுபேறுகளின் அடிப்படையில் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் பணிப்பாளர் சபைகளுடன் மற்றும்/அல்லது முகாமைத்துவங்களுடன் மீளாய்வுக் கூட்டங்களை நடாத்தியது. அரசுக்குச் சொந்தமான உபாயமுறையில் முக்கியத்துவம் பெறுகின்ற வியாபாரத் தொழில்முயற்சிகளின் நிதியியல் மொத்த விளைவு பின்னிணைப்பு VI இல் தரப்பட்டுள்ளது.

## 4. அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் செயலாற்றுகையை மேம்படுத்துவதில் பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் பங்களிப்பு

### 4.1 அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் செயலாற்றுகைகளை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தினால் செய்யப்பட்ட சிபாரிசுகள்

அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் குறுகிய கால மற்றும் நடுத்தரக் கால இலக்குகள் அடையப்பெறுவதை உறுதிப்படுத்துவதற்காகப் பின்வரும் முக்கியமான சிபாரிசுகள் முன்வைக்கப்படட்டன.

| துறை | அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **சக்தித் துறை**<br><br>இலங்கை மின்சார சபை (இ.மி.ச) மற்றும் | *2015 ஆம் ஆண்டில் இலங்கை மின்சார சபையின் தொழிற்பாட்டு இலாபம் 20.7 பில்லியன் ரூபாவாகப் பதிவாகியது.*<br>*இலங்கை மின்சார சபை அனல் மின் உற்பத்தியை நிலக்கரி மின் உற்பத்திக்கு மாற்றியதன் மூலம் தமது இந்த நிதி நிலைமையை முகாமை செய்தது. உற்பத்திக் கலவைக்கு 4,457 ஜிகாவொற் நிலக்கரி மின்சாரம் சேர்க்கப்பட்டதைத் தொடர்ந்து நீர் மின்வலுவில் தங்கியிருக்கும் தன்மை ஓரளவுக்குத் தளர்த்தப்பட்டுள்ளது.*<br>*2015 ஆம் ஆண்டில் நிலவிய ஈரலிப்பான வானிலை, நிலக்கரி மின் உற்பத்தி அதிகரித்தமை என்பவற்றின் காரணமாக, நீர்: அனல்: நிலக்கரி மின் உற்பத்திக் கட்டமைப்பு 39:35:26 இலிருந்து 44:20:36 மாற்றமடைந்தது. இதன் விளைவாக 2014 ஆம் ஆண்டில் 20.15 ரூபாவாகக் காணப்பட்ட அலகொன்றுக்கான உற்பத்திச் செலவு 14.85 ரூபாவாக வீழ்ச்சியடைந்தது.*<br>*விநியோக மற்றும் மாற்றல் முறைமைகளில் செய்த பாரிய முதலீடுகளின் மூலம், 2007 ஆம் ஆண்டில் 17 சதவீதமாகக் காணப்பட்ட முறைமை இழப்புக்களை, 2015 ஆம் ஆண்டில் 10 சதவீதமாகக இலங்கை மின்சார சபையினால் குறைக்க முடிந்தது.*<br>*கடனாகப் பெறப்பட்டிருந்த 173 பில்லியன் ரூபாவை அரசாங்கத்தின் உரிமையாண்மையாக மாற்றுவதற்கு 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் எடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மானங்களின் காரணமாக இலங்கை மின்சார சபை சாதகமான மூலதனக் கட்டமைப்பொன்றைத் தற்போது கொண்டுள்ளது.* | *மின்சாரக் கார்களின் வருகை, மென்மேலும் மின்சார உபகரணங்களின் பாவனை அதிகரிப்பபதற்கு காரணமாக அமையும் தலா வருமான அதிகரிப்பு என்பவற்றினால் மின்சக்தி கேள்வியும் பயன்பாடும் விரிவடைந்துள்ளமையினால் இலங்கை மின்சார சபையின் ஈடுபாடு மென்மேலும் அவசியமாகின்றது.*<br><br>*அதேநேரம், நாட்டின் சக்திக் கொள்கையானது 2020 ஆம் ஆண்டாகும் போது நாட்டின் மின் உற்பத்தியாற்றலில் ஆகக் குறைந்தது 20 சதவீதமாயினும் பாரம்பரியமல்லாத மூலங்களை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்று கூறுகின்றது. அதனால், இலங்கை மின்சார சபை தனது இலக்குகள்ளை அடைவதற்கு புத்தாக்கமான நிதி மற்றும் கட்டமைப்பு மாதிரிகளைக் கண்டறிய வேண்டியிருக்கும்.*<br><br>*இலங்கை மின்சார சபை தனது தொழிற்பாடுகளை விரிவுபடுத்தி மேம்படுத்துவதற்கு 2016-2020 காலப் பகுதியில் 15 பில்லியன் ரூபா வருடாந்தம் தேவைப்படுகின்றமை ஒரு பாரிய பிரச்சினையாக உள்ளது. இச்சூழ்நிலையில், முன்னோக்கிச் செல்வதாயின், தனது ஆதனத் தொகுதியைப் பராமரித்து, விரிவுபடுத்தி மேம்படுத்துவதற்கான நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இலங்கை மின்சார சபை மூலதனச் சந்தையினை நாட வேண்டியிருக்கும்.* |
| இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம் | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், பெற்றோலியத் துறையிலுள்ள மிகப்பெரிய சந்தைச் சக்தியாக விளங்குவதுடன் அது நாட்டின் பெற்றோலியச் சந்தையில் சுமார் 85 சதவீத பங்கினைக் கொண்டுள்ளதுடன் உராய்வு எண்ணெய்க் கைத்தொழிலில் மூன்றாவது மிகப்பெரிய சந்தைச் | மசகு எண்ணெய் கொள்வனவுக்கான அரசாங்கத்துக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான ஒப்பந்தங்கள் காணப்படாமை விநியோக்கப் பாதுகாப்பு மற்றும் திட்டமிடப்படாத சுத்தீகரிப்பு நிலைய மூடல்கள் தொடர்பான பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும். அதனால், அரசாங்கத்துக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான ஒப்பந்தம் மூலம் முர்பன் மசகு |

சக்தியாகவும் விளங்குகின்றது. 2015 ஆம் ஆண்டில் 1,867 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்ட இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இறக்குமதிகள், 18,935 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்ட நாட்டின் மொத்த இறக்குமதிகளில் 10 சதவீதமாகக் காணப்பட்டதுடன் அரசாங்கத்தின் வரி வருமானத்தில் சுமார் 10 சதவீதத்துக்கும் பங்களிப்புச் செய்துள்ளது.

சர்வதேச எண்ணெய்யின் விலைகள் வீழ்ச்சியடையத் தொடங்கியதையடுத்து, 2015 டிசம்பரில்மசகு எண்ணெய்யின் சராசரி இறக்குமதி விலை பீப்பாய்யொன்றுக்கு 41.22 ஐக்கிய அமெரிக்க டொலர்களாக வீழ்ச்சியடைந்தது. இது 2014 டிசம்பரில் 75.98 ஐக்கிய அமெரிக்க டொலர்களாகப் பதிவாகியிருந்தது.2015 ஆம் ஆண்டில் பெற்றோலிய உற்பத்திகளின் சராசரிச் சர்வதேச சந்தை விலைகள் பீப்பாய்யொன்றுக்கு 65 ஐ.அ.டொலர்களாகக் காணப்பட்டது. அதற்கிணங்க, பெற்றோலிய உற்பத்திகளின் சர்வதேச சந்தை விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சிகளின் பயன்களை நுகர்வோருக்கு வழங்கும் நோக்கில் 2015.01.22 ஆந் திகதி அரசாங்கம் பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு விலையைப் பாரியளவில் குறைத்தது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 2015 ஆம் ஆண்டுக்கான தொழிற்பாட்டு இலாபம் 27.6 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இது 2014 ஆம் ஆண்டின் தொழிற்பாட்டு இலாபமாகிய 12.4 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 122 சதவீத அதிகரிப்பாகும். எவ்வாறாயினும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 2014 ஆம் ஆண்டில் உழைத்த 1.6 பில்லியன் ரூபாவாகக் தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில், அது 2015 ஆம் ஆண்டில் 18.4 பில்லியன் ரூபா நட்டத்தைக் காட்டியது. இவ்வருடத்தில் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக ரூபாவின் பெறுமதி 9.3 சதவீதத்தால் குறைந்தமையும் தவிர்க்க முடியாத பாரியளவிலான வங்கிக் கடன்களின் காரணமாக ஏற்பட்ட நிதிச் செலவுகளும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நட்டமடைவதில் பிரதானமான தாக்கத்தினை ஏற்படுத்தின. எண்ணெய்யைக் கொள்வனவு செய்வதன் சாத்தியங்களைக் கண்டறிவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சிலோன் பெற்றோலியம் ஸ்டொரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் கம்பனியின் கொலன்னாவையிலும் முதுராஜவளையிலும் உள்ள முனையங்கள் வரையறுக்கப்பட்ட கொள்ளளவைக் கொண்டிருப்பதனால் குறிப்பாக எண்ணெய்யின் விலைகள் குறைவாகக் காணப்படும் காலங்களில் சிலோன் பெற்றோலியம் ஸ்டொரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் கம்பனி களஞ்சியப்படுத்தலில் சிரமங்களை எதிர்நோக்குகின்றது. இப்பின்னணியில் தான், திருகோணமலை மேல் தாங்கிப் பண்ணையை திரும்பவும் எண்ணெய் களஞ்சியப்படுத்தலுக்குப் பயன்படுத்துவதன் சாத்தியங்கள் தொடர்பில் கண்டறியப்படும் என்று 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளது.

துறைமுகத்திலிருந்து முனையங்களுக்கு உற்பத்திகளை விடுவிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்ற நாட்டுக்கு குறுக்கே அமைக்கப்பட்டுள்ள குழாய்த் தொகுதி மிகவும் பழமையானதாகக் காணப்படுவதனால் பம்பிகளில் குறைந்த அழுத்தம் பயன்படுத்தப்படுகின்றது. அதனால் அதிக நெரிசல் நிலை ஏற்படுகின்றது. அதனால், சரக்குகளை வெளியேற்றுவதற்கு எடுக்கும் நேரம் அதிகமாக இருப்பதனால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு பாரியளவிலான தாமதக் கட்டணங்களைச் செலுத்த வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இந்த நிலைமைகளைக் கவனத்திற் கொண்டு புதிய தொழில்நுட்பங்களுடன் கூடியதாக நாட்டுக்கு குறுக்கேயான குழாய்த் தொகுதியொன்றை அமைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

| | | |
|---|---|---|
| | இந்த நட்டங்களில் *69* சதவீமானவை உள்நாட்டுப் போக்குவரத்துத் துறையினால் ஏற்பட்டதாகவுள்ள அதேவேளை *20* சதவீதம் உள்நாட்டில் சுத்தீகரிக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்ட உற்பத்திகளைச் சாரும். செலவை விடக்குறைவாக மண்ணெண்ணெய்யை விற்பனை செய்ததனால் வீட்டுத் துறைக்காக ஏற்பட்ட நட்டங்கள் மூன்றாவது இடத்தில் காணப்பட்டதுடன் அது மொத்த நட்டங்களில் *11* சதவீதமாகக் காணப்பட்டது.<br><br>எவ்வாறாயினும், பொதுவாக வற்றிய நிலையிலிருக்கும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நீர்த்தேக்கங்களைக் கொண்ட மின் உற்பத்தித் துறை, மின் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் எரிபொருள் இலாபத்துடன் விற்கப்பட்டதனால் *2015* ஆம் ஆண்டில் இலாபகரமான தொழில்முயற்சியாக மாறியது. | |
| **நீர் வழங்கல் துறை**<br><br>தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை | தற்போது *44* சதவீதமாகக் காணப்படும் குழாய் நீர் வழங்கலின அளவை *2020* ஆம் ஆண்டாகும் போது *60* சதவீதமாக மேம்படுத்துவதில் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை முக்கியமான வகிபாகத்தை நிறைவேற்ற வேண்டியுள்ளது.<br><br>*2015.03.18* ஆந் திகதி எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, திறைசேரியினால் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபைக்கு வழங்கப்பட்டிருந்த *2014.21.31* ஆந் திகதியில் உள்ளவாறான *39.8* பில்லியன் ரூபா கடன் அரசாங்கத்தின உரிமையாண்மைப் பங்களிப்பாக மாற்றப்பட்டதன் மூலம் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையின் ஐந்தொகையைப் பலப்படுத்தப்பட்டது.<br><br>ஒட்டுமொத்த வருமானம் தராத நீரின் அளவு பல ஆண்டுகளாகக் குறைவடைந்து *27.28* சதீதமாகக் காணப்படுகின்றது. என்றாலும், பாரிய கொழும்புப் பிரதேசத்தில் அது இன்றும் *46.16* சதவீதமாகக் காணப்படுகின்றமை தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையின் தொழிற்பாட்டுச் செயலாற்றுகையின் மீது கணிசமான அளவு சுமையை ஏற்படுத்தி வருகின்றது. தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை எதிர்நோக்கி வந்த திரவத் தன்மைப் பிரச்சினையைக் | பலவீனமான காசுப் பாய்ச்சல் நிலைமையின் காரணமாக தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை செயற்திட்டப் படுகடன்களுக்கான சேவைகளை சுயாதீனமாக வழங்கக்கூடிய நிலைமை காணப்படாமையினால், அதன் காசுப் பாய்ச்சல் நிலைமை மேம்படும் வரையில் திறைசேரி தேவைப்படும் நிதி உதவிகளை வழங்கும். அதற்கிணங்க, நடுத்தரக் காலத்தில் படுகடன் சேவைகளுக்கான உடன்பாடு காணப்பட்ட திறைசேரி உத்தரவாதங்களும் தேவையான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளும் வழங்கப்படும்.<br><br>நீர் வழங்கல் செயற்திட்டங்களின் தேசிய முக்கியத்துவத்தைக் கவனத்திற் கொண்டு, *2020* ஆம் ஆண்டாகும் போது *60%* குழாய் நீர் வழங்கலை அடைவது என்ற இலக்கை அடைவதற்கு தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை திட்டமிடப்பட்டுள்ளது போன்று நீர் வழங்கல் செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்வது தொடர்பில் விசேட கவனம் செலுத்துவது அவசியமாகும்.<br><br>சிறியளவிலான செயற்திட்டங்களுக்கான நிதியிட்ட வசதிகளை தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை சுயமாக ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். அந்த வகையில், போட்டித்தன்மை கொண்ட |

| | | |
|---|---|---|
| | கவனத்திற் கொண்டு, நீர் வழங்கல் செயற்திட்டங்களுக்கு உள்நாட்டு நிதியிடல் தேவைகளுக்கு நிதியீட்டம் செய்வதற்காக 13.9 பில்லியன் ரூபா பெறுமதியான முறிகளை திறைசேரி விநியோகித்தது.<br><br>நாட்டின் சனத்தொகையில் 100 சதவீதத்தினருக்கும் பாதுகாப்பான குடிநீரைப் பெறுவதற்கான வசதியை வழங்குவதை, குறிப்பாக, தற்போது காணப்படும் நீடித்த சிறுநீரக நோய்ப் பிரச்சினையைத் தணிப்பதை அரசாங்கம் இலக்காகக் கொண்டுள்ளது. இந்த வகையில், அடுத்துவரும் ஐந்து வருடங்களில் நீடித்த சிறுநீரக நோயைக் குறைப்பதை நோக்காகக் கொண்ட நீர் வழங்கல் செயற்திட்டங்களுக்கான 100% படுகடன் சேவைகளை (மூலதனம் மற்றும் வட்டி) திறைசேரி பொறுப்பேற்கும். | வீதங்களில் படுகடன் நிதியீட்டத்தைச் செய்யக்கூடிய வகையில் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை நிறுவனத் தரப்படுத்தலைப் பெறும்.<br><br>தற்போதைய கட்டண அறவீட்டு முறைமையானது, அதன் நிதிக் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்யக்கூடிய காசுப் பாய்ச்சலை உருவாக்காமையினால், வெளிப்படைத்தன்மையுடன் கூடிய செலவைப் பிரதிபலிக்கும் கட்டணப் பொறிமுறையொன்று இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் விடயப் பரப்பின் கீழ் படிப்படியாகப் பின்பற்றப்பட வேண்டும்.<br><br>பெரும்பாலான நீர் வழங்கல் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் தேவையற்ற காலதாமதங்களும் பணிப்பரப்பு மாற்றங்களும் அவதானிக்கப்பட்டன. இவ்வறின் காரணமாக மேலதிக அர்ப்பணிப்புக் கட்டணங்களும் தேவையற்ற செலவு அதிகரிப்புக்களும் ஏற்படுகின்றன. அதனால், செயற்திட்டக் கண்காணிப்புத் திணைக்களம், இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு என்பற்றின் ஒத்துழைப்புடன் நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் அமைச்சு, நீர் வழங்கல் செயற்திட்டங்களை நெருக்கமான முறையில் கண்காணிப்பதற்கான பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்த வேண்டும். |
| **பயணிகள் போக்குவரத்துத் துறை**<br><br>இலங்கை போக்குவரத்துச் சபை | இ.போ.சயின் மேலதிக ஊழியர்களை அகற்றுவதற்கான கவர்ச்சியான தன்னார்வ இளைப்பாறல் திட்டமொன்று முன்மொழியப்பட்டுள்ளதுடன் ஆகக் குறைந்தது 8,000 ஊழியர்களாவது ஓய்வுபெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.<br><br>இ.போ.ச தனது பொருளாதார ரீதியில் பயன்குறைந்த மேலதிகக் காணிகளை அரசாங்கத்தின் அபிவிருத்திக் செயற் திட்டங்களுக்கு விற்பனை செய்வதன் ஊடாக செலுத்தப்படாதுள்ள நியதிச்சட்டக் கட்டணங்களைச் செலுத்துவதற்காக 13.2 பில்லியன் ரூபாவைப் பெறுவதற்த்கான செயற்பாட்டை மேற்கொண்டு வருகின்றது. மீளெழும் செலவுகளைச் செலுத்துவதற்காக இ.போ.சபைக்கு பொதுத் திறைசேரி மாதாந்தம் 1,350 மில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளது. | தொழில்முயற்சி மூலவளத் திட்டம், இ.போ.சபை, தனது தொழிற்பாடுகளை மிகவும் வினைத்திறன்மிக்க முறையிலும் பயனுறுதி வாய்ந்த முறையிலும் முகாமை செய்வதைச் சாத்தியப்படுத்தும் தொழிற்பாட்டு மட்டத்திற்கும் விரிவுபடுத்தப்படவுள்ளது.<br><br>பயண ஓட்டத்திற்குப் பயன்படுத்த முடியாத நிலையிலுள்ள பஸ் வண்டிகள் அனைத்தையும் அகற்றுதல்.<br><br>இ.போ.சபையை இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றியமைப்பதற்கான வியாபாரத் திட்டமொன்று உருவாக்கப்பட வேண்டும். பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளை நடைமுறைப் படுத்தப்படுத்துவதன் ஊடாக எரிபொருள் வினைத்திறனின்மை மற்றும் கசிவுகளைக் குறைத்தல். |

<table>
<tr>
<td>விமானப் போக்குவரத்துத் துறை</td>
<td>விமானப் போக்குவரத்துத் துறையானது ஒவ்வொரு நாட்டிலும் சுற்றுலாத் துறையுடன் பலமான தொடர்புகளைக் கொண்டுள்ளன.2015 ஆம் ஆண்டில் இலங்கை 8,505,740 பயணிகளைக் கையாண்டுள்ளது. இது 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 9.3 சதவீத அதிகரிப்பாகும். மேலும் சர்வதேச விமான இயக்கம் 2015 ஆம் ஆண்டில் 2 சதவீதத்தால் அதிகரித்து 56,292 விமானப் பயணங்களாக அமைந்தது.</td>
<td>விமானப் போக்குவரத்துத்துத் துறைக்கான விமான சேவைகள், தரைக் கையாளல் ஆற்றல்கள், விமான நிலைய வசதிகள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளும் அவற்றுடன் தொடர்புடைய சேவைகளும் மேம்படுத்தப்பட வேண்டியுள்ளன.<br><br>சேவை வழங்கல் உல்லாசப் பயணிகள் மத்தியில் நாட்டின் நற்பெயரை நேரடியாகப் பாதிப்பதனால் வினைத்திறன்மிக்கதும் பயனுறுதி வாய்ந்ததுமா சேவை வழங்கப்படுவதை உறுதிப்படுத்துவது அவசியமாகும்.</td>
</tr>
<tr>
<td>வ/ப (இலங்கை) விமான நிலைய, விமானப் போக்குவரத்துச் சேவை</td>
<td>வரையறுக்கப்பட்ட (இலங்கை) விமான நிலைய, விமானப் போக்குவரத்துச் சேவை தற்போது பண்டாரநாயக சர்வதேச விமான நிலைய அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கட்டம் II இற்கான நிர்மாணப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. இதன் மூலம் வருடமொன்றுக்கு 15 மில்லியன் பயணிகளை கையாளக் கூடியதாக இருக்கும்.</td>
<td>2016 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட உரையில் குறிப்பிடப்பட்டது போன்று, மத்தளை விமான நிலையத்தை சரக்குப் போக்குவரத்து மத்திய நிலையமொன்றாகப் பயன்படுத்தும் நோக்கில் கூரியர் கம்பனிகளை ஒருங்கிணைப்பதற்கும் தனியார் துறையினரை பறத்தற் பயிற்சிப் பாடசாலையையும் பராமரிப்பு, திருத்த, ஓவர்ஹோல் வசதிகளையும் நிர்மாணிப்பதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.</td>
</tr>
<tr>
<td>ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்</td>
<td>ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் கம்பனியில் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி என்பன கொண்டிருந்த பங்குகள், பின்வரும் விதத்தில் திறைசேரி முறிகளை விநியோகித்ததன் மூலம் திறைசேரியினால் மீள்கொள்வனவு செய்யப்பட்டன.<br><br>
<table>
<tr><th>வங்கிகள்</th><th>பங்குகளின் எண்ணிக் கை</th><th>விநியோகி க்கப்பட்ட திறைசேரி முறிகள் ரூபா.மில்</th></tr>
<tr><td>இலங்கை வங்கி</td><td>12,155,570</td><td>3,732.37</td></tr>
<tr><td>மக்கள் வங்கி</td><td>4,236,135</td><td>1,305.00</td></tr>
<tr><td>தே. சே. வங்கி</td><td>4,236,135</td><td>1,305.00</td></tr>
<tr><td>மொத்தம்</td><td>20,627,840</td><td>6,342.37</td></tr>
</table>
<br>இதன் மூலம் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிடட்டிலுள்ள அரசாங்கத்தின் உரிமை 99.11 சதவீதம் வரை அதிகரித்தது.<br><br>2014/2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிடட்டுக்கான மூலதனப் பங்களிப்பாக அரசாங்கம் 125 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை அரசாங்கம் வழங்கியது.</td>
<td>ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம், மிஹின் லங்கா நிறுவனம் ஆகிய இரண்டுக்குமான நடுத்தரக் காலத்தில் பொருளாதார ரீதியாக வெற்றியளிக்கக்கூடிய மாற்று வழிவகைகளை கண்டறியும் வியாபாரத் திட்டங்களை வடிவமைக்குமாறும் அரசாங்கம் பணிப்புரைகள் வழங்கியுள்ளது. அதற்கிணங்க, இந்த இரண்டு விமான சேவைகளும் 2016 ஆண்டில் மீள்கட்டமைக்கப்படவுள்ளன.<br><br>ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிடட்டின் 2015.21.31 ஆந் திகதியில் உள்ளவாறான அனைத்துப் பொறுப்புக்களையும் பொறுப்பேற்பதற்கு அரசாங்கம் தீர்மானித்ததுடன் அதன் வியாபாரத் தொழிற்பாடுகளை வெற்றிகரமாக முகாமைசெய்வதற்குப் பொருத்தமான பங்காளொருவரைக் கண்டறியுமாறு அறிவுறுத்தல் வழங்கியது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| வ/ப மிஹின் லங்கா (தனியார்) கம்பனி | ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிடட் மற்றும் மிஹின் லங்கா லிமிடட் என்பன எரிபொருள் கொள்வனவுக்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்துவதற்காகவும் 2014/2015 நிதி ஆண்டிற்கான செயற்பாட்டு மூலதனத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் ஒவ்வொன்றும் 15 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களைப் பெறுமதியான இரண்டு வசதிக் கடிதங்களை இலங்கை வங்கிக்கும் மக்கள் வங்கிக்கும் திறைசேரி விநியோகித்தது.<br><br>2014/2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மிஹின் லங்கா லிமிடட்டுக்கான மூலதனப் பங்களிப்பாக அரசாங்கம் 25 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை அரசாங்கம் வழங்கியது. | |
| **துறைமுகங்கள் துறை** | இலங்கை துறைமுக அதிகாரசபையினால் இவ்வருடத்தில் அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கட்டம் II ஐ பூர்த்தி செய்ய முடிந்தது. மேலும் கட்டம் III இற்கான காணி சுவீகரிப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.<br><br>கிழக்கு கொள்கலன் முனையத்தின் நிர்மாணச் செயற்பாடுகள் 2015 ஆம் ஆண்டின் முதல் அரைப் பகுதியில் பூர்த்திசெய்யப்பட்டன. கிழக்கு கொள்கலன் முனையத்தின் தொழிற்பாட்டுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் அரசாங்க தனியார் பங்குடமை உபாயமொன்றுக்காக துறைமுகத் துறையின் அபிவிருத்திக்கான வியாபார மாதிரியொன்றை உருவாக்குவதற்கு திறைசேரியின் ஆலோசனையுடன் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நடவடிக்கைககள் எடுக்கப்பட்டு வருகின்றன.<br><br>நாட்டில் முக்கியமான துறைமுகம் என்ற வகையில் கொழும்பு துறைமுகம் மாதாந்தம் சராசரியாக 350 கப்பல் வருகைகளையும் மாதாந்தம் சராசரியாக 180,000 TEUகளையும் 2015 ஆம் ஆண்டில் கையாண்டது.<br><br>துறைமுக அபிவிருத்திக் செயற்திட்டங்களுக்காக 2015 ஆம் ஆண்டின் இறுதி வரையில் இலங்கை துறைமுக அதிகார சபை 218 பில்லியன் ரூபா வரையான வெளிநாட்டு நிதிகளையும் 14.9 பில்லியன் | இலங்கை துறைமுக அதிகாரசபையின் மொத்தக் கடன் பொறுப்பு இலங்கை துறைமுக அதிகாரசபையின் மொத்தச் சொத்துக்களில் 69 சதவீதமாகக் காணப் படுவதனால், படுகடன் ஸ்திரத்தன்மை யை உறுதிப்படுத்து வதற்காக அறிவுபூர்வமான படுகடன் முகாமை முறைமையொன்றை நடைமுறைப் படுத்துவதற்கு அது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சிபாரிசு செய்யப்பட்டது.<br><br>நாணயச் செலாவனி மீதான தாக்கத்திற்கான மேலதிக நிதி உள்ளடங்களாக ஏற்கனவே பெறப்பட்ட கடன்களை மீளச்செலுத்துவதற்குத் தேவையான நிதி அவசியம் என்பதால், சிறந்த உட்கட்மைப்பு மற்றும் வினைத்திறன்மிக்க தொழிற்பாட்டு நடவடிக்கைகளை அதிகரிப்பதன் மூலம் புரள்வினை அதிகரிப்பதற்கு இலங்கை துறைமுக அதிகார சபையானது உடனடி நடவடிக்கை எடுக்கப்படுதல்வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ரூபா வரையான உள்நாட்டுக் கடன்களையும் பெறுவதற்கான வசதி ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டன.<br><br>கிழக்கு கரையோரத்தில் சுற்றுலாத் துறைச் செயற்பாடுகளின் அபிவிருத்திக்கான ஒரு முன்னுரிமைச் செயற்திட்டமாக காலித் துறைமுகம் இலங்கை துறைமுக அதிகார சபையினால் அடையாளம் காணப் பட்டுள்ளது. இச்செயற்திட்டத்தை 2016 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் ஆரம் பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கிட்டிய எதிர்கால த்தில், இலங்கை துறைமுக அதிகார சபையினால்<br><br>அறிமுகப்படுத்தப்படவுள்ள கடற்பயணி அடையாள ஆவணத்திற்கு இணங்க திறமைச் சான்றிதழ் (COC)வழங்கும் முறையொன்றும் கடற்பயணி தொடர்ப விடுவிப்புச் சான்றிதழ் (CDC) வழங்கும் முறையொன்றும் நடைமுறைப் படுத்தப்படும். | |
| **நிர்மாணத் துறை** | குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அறிக்கைகளைச் சமர்ப்பிக்குமாறு அரச பொறியியல் கூட்டுத்தாபனம், மத்திய பொறியியல் உசாவுகைப் பணியகம் மற்றும் அரச அபிவிருத்தி மற்றும் நிர்மான கூட்டுத்தாபனம் என்பவற்றுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.<br><br>அரச பொறியியல் கூட்டுத்தாபனம் எதிர்நோக்கிய திரவத்தனமை பிரச்சினைகளினால் 2015 வரவு செலவுத்திட்டத்தினால் முன்மொழியப்பட்டவாறு சம்பள அதிகரிப்பினை மேற்கொள்வதற்கு விடுக்கப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுதொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கான அவதானிப்புகள் சமர்ப்பிக்கப்பட்டன. | தனியார் துறையுடன் போட்டியிடும் வகையில் புதிய நிர்மான நடைமுறைகளையும் செயன்முறைகளையும் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.<br><br>நிறுவனத்தின் ஆற்றல் வரையறைகளுக்கு உட்பட்ட வகையிலேயே ஒப்பந்தங்கள் பொறுப்பேற்கப்பட வேண்டும்.<br><br>புதிய பாரிய தொழில்முயற்சிகளைக் கையாளும் ஆற்றல்கொண்ட உயர் தேர்ச்சிபெற்ற ஊழியப் படை ஆட்சேர்ப்புச் செய்யப்பட வேண்டும்.<br><br>ஒவ்வொரு செயற்திட்டத்தையும் பொறுப்பேற்க முன்னர் அச்செயற்திட்டங்களுக்கு வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் காணப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| **வங்கித் துறை** | *2015 ஆம் ஆண்டில் அரச வங்கிகளால் திறைசேரிக்கான பங்கிலாபமாக 36 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டது.*<br><br>மேலும், அரசாங்க வங்கிகளின் ஐந்தொகைகளை மேம்படுத்துவதற்காகவும் சிறந்த வீதங்களைப் பெறுவதற்காகவும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளில் அதிக வாய்ப்புக்களைப் பெறுவதற்காகவும் அவ்வங்கிகளை ஒருங்கிணைக்க வேண்டும் என்று 2016 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டது.<br><br>அதற்கிணங்க, இந்த ஒருங்கிணைப்புச் செயன்முறையை அரச தொழில்முயற்சி அமைச்சு ஆரம்பித்துள்ளது. | இலங்கை வங்கி, மக்கள் வங்கி என்பவற்றின் சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சி நிலையங்கள், சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சித் துறையின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் மறுசீரமைக்கப்பட வேண்டும்.<br><br>இத்துறையிலுள்ள போட்டியாளர்களுடன் போட்டியிடக்கூடியவாறு தொழில்நுட்ப ஆற்றல்களை மேம்படுத்துவது அவசியமாகும்.<br><br>இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி என்பன அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான அரசாங்கத்தின் பங்குகளில் 43 சதவீதமாகக் காணப்படுன்றன.கடன்களின் தரத்தை மேம்படுத்தி மீள அறவிடும் பொறிமுறையை மேம்படுத்துதல்.<br><br>பொருளாதாரத்தின் வளர்ந்துவரும் துறைகளுக்கு கடன் வசதிகளை செய்து கொடுப்பதற்காக அத்தகைய துறைகளை அடையாளம் காணுதல்.<br><br>இலங்கை சேமிப்பு வங்கி பிரதான வங்கிச் செயற்பாடுகளில் அன்றி முதலீட்டு வருமானத்திலேயே அதிகளவில் தங்கியுள்ளது. 80 சதவீதமான வருமானம் முதலீட்டுச் செயற்பாடுகள் மூலம் கிடைக்கின்ற அதேவேளை அதில் 92 சதவீதம் அரச வங்கிகளில் செய்யப்பட்டுள்ள நிலையான வைப்புக்கள் மூலமான வட்டியின் மூலம் பெறப்படுகின்றது.<br><br>வங்கியின் பிரதான செயற்பாடுகளுக்கு மூலதனம் பயன்படுத்தப்படாமையும் ஆதன முகாமையிலுள்ள பலவீனமுமே இலாபமீட்டும் தன்மை குறைவடைவதற்குக் காரணமாக அமைந்ததன. |
| **சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகம்**<br><br>ஹொட்டேல் டெவலொப்பர்ஸ் லங்கா பீஎல்சீ | *2013//14 ஆம் ஆண்டில் 2,858 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட ஹொட்டேல் டெவலொப்பர்ஸ் லங்கா கம்பனியின் வரும் 2014/2015 ஆம் ஆண்டில் 2,543 மில்லியன் ரூபாவாக வீழ்ச்சியடைந்துள்ளது.*<br><br>ஹொட்டேல் டெவலொப்பர்ஸ் லங்கா கம்பனி 2014/2015 ஆம் நிதி ஆண்டில் 275 மில்லியன் ரூபாவை வரிக்கு முன்னரான இலாபமாக உழைத்துள்ளது. | ஒவ்வொரு செலவீட்டு மட்டத்திலுமுள்ள உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப் பயணிகளைக் கவர்வதற்காக நெகிழ்ச்சித் தன்மைகொண்ட விலைப் பொதிகள் உருவாக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ஹொட்டேல் டெவலொப்பர்ஸ் லங்கா கம்பனி, ஹோட்டலைப் புதுப்பிப்பதற்காக இலங்கை வங்கி, சம்பத் வங்கி என்பவற்றிடமிருந்து 27 மில்லியன் ஐ. அ. டொலர்களைக் கடனாகப் பெற்றுள்ளது. | |
| இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை (லக்சல) | 2015 ஆம் ஆண்டில் லக்சல நிறுவனத்தின வருமானம் 10 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்ததன் காரணமாக 2014 ஆம் ஆண்டில் 15 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட வரிக்கு முன்னரான இலாபம் 2015 ஆம் ஆண்டில் 40 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 9 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.<br>2016 ஆம் ஆண்டில் 2.5 மில்லியன் உல்லாசப் பிரயாணிகளின் வருகை இலக்காகக் கொண்டு சுற்றுலாத் துறை ஊக்குவிப்படுவதனால் உள்நாட்டுப் பரிசுப் பொருள் மற்றும் நினைவுச் சின்னக் கைத்தொழில் துறைக்கு பாரிய சந்தை வாய்ப்புக்கள் உருவாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதனால் கைப்பணிப் பொருட்கள் உற்பத்தித் துறை பாரியளவில் வளர்ச்சியடையும் சாத்தியம் காணப்படுகின்றது. | விரிவடையும் சுற்றுலாத் துறையின் மூலம் உச்ச பயனைப் பெறுவதற்காக உல்லாசப் பயணிகள் மத்தியில் பிரபல்யமடைந்துள்ள பிரதேசங்களில் விற்பனை நிலையங்களை அமைக்க வேண்டும்.<br>நிலைபேறானதும் சந்தைப் பங்கை அதிகரிக்கக் கூடியதுமான பொருத்தமான உபாயத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு நிறுவனத்துடன் இணைக்கப்பட வேண்டும்.<br>கட்டட வாடகைகளைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது அவசியமாகும். |
| வ/ப லங்கா சதொச நிறுவனம் | வ/ப லங்கா சதொச நிறுவனம் 6 புதிய விற்பனை நிலையங்களைத் திறந்த போதிலும், அதன் தொழிற்பாட்டு மூலதனப் பற்றாக்குறையின் காரணமாக அதன் விற்பனை வருமானம் 5 சதவீதத்தால் குறைவடைந்தது.<br>2014 ஆம் ஆண்டில் வ/ப லங்கா சதொச நிறுவனம் உள்நாட்டுச் சந்தையில் அரிசிப் பற்றாக் குறையைத் தவிர்ப்பதற்காக அரிசியை இறக்குமதி செய்வதற்காகப் 14 பில்லியன் ரூபாவை வங்கிக் கடனாகப் பெற்றது. 2015 ஆம் ஆண்டின் இறுதி வரையில் 8.7 பில்லியன் ரூபா நிலுவையாகக் காணப்பட்டது. | இந்நோக்கத்தை அடைவதற்காக இந்நிறுவனத்தை இலாபமீட்டும் ஒரு நிறுவனமாக மாற்றியமைப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை வ/ப லங்கா சதொச நிறுவனம் எடுப்பது அவசியமாகும். வ/ப லங்கா சதொச நிறுவனம் தனது நிறுவன நிர்வாகத்தைக் குறிப்பாக பெறுகைச் செயன்முறையில் காணப்படும் பலவீனங்களை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுப்பது அவசியமாகும். |
| வ/ப இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தபானம் | முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் 2015/16 ஆம் ஆண்டில் அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபனத்தின் மொத்த வருமானம் 25 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. அரச துறையின் தகவல் தொழில்நுட்பச் செயற்திட்டங்களும் உள்ளக வடிமைப்புச் செயற்திட்டங்களும் பிற்போடப்பட்டமையே இவ்வாறு வருமானம் குறைவதற்குப் பிரதான காரணமாக அமைந்தது.<br>குறுகிய கால நிதியீட்ட வசதிகளின்றி அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபனத்தினால் | பொதுவான உற்பத்திகளுக்கான புதிய உபாயங்களைப் பின்பற்றுவதன் மூலம் தனியார் துறையில் நுழைவதற்கு வழிசெய்வதன் மூலம் அரசாங்கத் துறைச் சந்தையில் ஏற்படக் கூடிய வியாபார இழப்புச் சாத்தியங்களை அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபனத்தினால் குறைக்கக் கூடியதாக இருக்கும்.<br>அதன் வர்த்தக நாமத்தை இச்சந்தைகளில் |

| | | |
|---|---|---|
| | தொழிற்பாட்டுக் காசுப் பாய்ச்சலை முகாமை செய்ய முடியவில்லை. அதன் விளைவாக, 2015/16 ஆம் ஆண்டில் நிதிச் செலவு பாரியளவில் அதிகரித்துக் காணப்பட்டது. | ஊக்குவிப்பதற்கான உபாயங்களை ஊக்குவித்தல். |
| அரசாங்க அச்சகக் கூட்டுத்தபானம் | பாடசாலைகளுக்கான பாட நூல்களை அச்சிடுவது குறைந்ததன் காரணமாக அரசாங்க அச்சகக் கூட்டுத்தபானத்தின் பிரதான வியாபாரத்தின் மூலமான வருமானம் 2.5 சதவீதத்தால் குறைவடைந்ததுடன் அரசாங்க சம்பள அதிகரிப்பின் காரணமாக மொத்தச் செலவில் 4 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டது. இந்த வகையில், 2014 ஆம் ஆண்டில் 71 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட வரிக்கு முன்னரான இலாபம் 2015 ஆம் ஆண்டில் 3 மில்லியன் ரூபா வரை குறைவடைந்தது. 2015 ஆம் ஆண்டில் அரச மருந்துப்பொருட் கூட்டுத்தாபனம் கையிருப்பாக 4.5 மாதங்களுக்குப் பயன்படுத்தக் கூடிய மூலப்பொருட்களை வைத்திருந்ததுடன் அதற்கு முதலீடு செய்வதற்காக 200 மில்லியன் ரூபா தேவைப்படுகின்றது. விற்பனைகள் மூலம் (கடனாளர் சேகரிப்புக் காலம்) காசு சேகரிப்பதற்கு சுமார் 6 மாதங்கள் தேவைப்படுகின்றது. அதற்கு 673 மில்லியன் ரூபா தேவைப்படுவதுடன் மொத்தமாக 873 மில்லியன் ரூபா தொழிற்பாட்டு மூலதனமாக முதலீடு செய்யப்பட்டுள்ளது. | நிதிச் செலவைக் குறைத்து இலாபமீட்டும் இலாபமீட்டும் தன்மையை மேம்படுத்துவதற்காக தொழிற்பாட்டு மூலதன முகாமையை இக்கூட்டுத்தாபனத்தாபனம் மேம்படுத்துவது அவசியமாகும்.<br><br>அரச மருந்துப்பொருட் கூட்டுத்தாபனம் மிகவும் செலவு வினைத்திறன்மிக்க நிறுவனமாகவும் நடுத்தரக் காலத்தில் இலாபமீட்டும் தன்மையை மேம்படுத்துவதற்காகவும் தனது ஆற்றல்களைப் உச்சளவில் பயன்படுத்தி சந்தைப் பங்கை மேம்படுத்துவது அவசியமாகும். |
| | அரசாங்க மரக் கூட்டுத்தபானம்<br><br>2014 ஆம் ஆண்டில் 3,473 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட அரசாங்க மரக் கூட்டுத்தபானத்தின் வருமானம் 2015 ஆம் ஆண்டில் 3,836 மில்லியன் ரூபாவாக அதிகரித்திருந்தது.<br>அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் இலாபம் 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2015 ஆம் ஆண்டில் 90 சதவீதத்தால் அதிகரித்து 390 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.<br>2015 ஆம் ஆண்டில் 50 மில்லியன் ரூபா தீர்வையாகத் திறைசேரிக்குச் செலுத்தப்பட்டுள்ளது. | சந்தைக் கேள்வியைப் பூர்த்தி செய்து கூடிய இலாபத்தைப் பெற்றுத் தரும் சூழல் நட்புறவான உற்பத்திகளில் கவனம் செலுத்துவதன் மூலம் இக்கைத்தொழிலின் வெற்றியளிக்கும் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.<br><br>தளபாடத் தயாரிப்புக்கான உபாயமுறை பங்குடமைகளைக் கட்டியெழுப்புதல். |
| **காப்புறுதித் துறை** | மொத்தத வருமானம் 29,818 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இது கடந்த ஆண்டின் வருமானமான 29,301 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 1.7 சதவீத அதிகரிப்பாகும். இவ்வருடத்தின் மொத்த | நாட்டில் காப்புறுதி குறைவாகப் பிரபலமடைந்திருப்பதுடன் பாரியளவில் விரிவடைவதற்கான சாத்தியத்தையும் கொண்டிருப்பதனால், பயன்படுத்தப்படாத சந்தைகளைப் பயன்படுத்துவதற்கான புதிய வியாபாரம் |

| | | |
|---|---|---|
| இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | *ரிட்டன் பிரீமியம் 24,411 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இது முன்னைய வருடத்தின் 20,665 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 18 சதவீத அதிகரிப்பாகும்.*<br><br>*2014 ஆம் ஆண்டில் 5.84 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் மொத்த ரிட்டன் பிரிமியம் 12.9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 5.08 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. 2014 ஆம் ஆண்டின் 3.24 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் மொத்தக் கோரிக்கைகள் ஒரு சதவீதத்தால் அதிகரித்து 3.2 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் 2015 ஆம் ஆண்டில் தீர்வையாக 3.0 பில்லியன் ரூபாவை திரட்டு நிதியத்திற்குச் செலுத்தியுள்ளது.* | அபிவிருத்தி உபாயங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியுள்ளன.<br><br>வேறுபடுத்தப்பட்ட/ நெகிழ்ச்சியான பண்டங்கள் என்பன போன்ற போட்டித்தன்மை வடிவ மாற்றுத்தெரிவுகளின் ஊடாக சிறந்த எழுத்துறுதி உத்தரவாதத்தைப் பேணுதல். |
| **பண்ணை விலங்குகள் துறை**<br><br>*மில்கோ (பிரைவெட்) லிமிடட்* | *2016 வரவு செலவுத் திட்டத்திற்கு அமைவாக பால் மாவின் உள்நாட்டு விலை குறைக்கப்பட்டதுடன் மில்கோவினால் எதிர்நோக்கப்பட்ட நட்டங்கள் திறைசேரியினால் மீளளிக்கப்பட்டது.*<br><br>*மில்கோ நிறுவனம் இலாபமீட்டுவதற்காகத் தனது ஏனைய உற்பத்திப் பொருட்களின் விலைகளை மீளாய்வு செய்வதற்கான வசதி ஏற்பாடுகளைத் திறைசேரி மேற்கொண்டது.*<br><br>*இரண்டு ஐரோப்பிய கடன்களான 33.8 மில்லியன் மற்றும் 64 மில்லியனை திறைசேரி ஏற்பாடுசெய்தது. அவற்றுள் முதலாவது கடன் (34 மில். யூரோ) அம்பேவல, டிகன மற்றும் பொலனறுவையிலுள்ள தொழிற்சாலைகளை புதுபிப்பதற்காக பெறப்பட்டதுடன் அவற்றுள் இரண்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன. அம்பேவல தொழிற்சாலை 2016 ஜூன் இறுதியளவில் நிறைவு செய்யப்படவுள்ளது. இரண்டாவது கடன் நாரஹன்பிட பால் தொழிற்சாலை பதலகமவிற்கு மாற்றுவதற்கானது. இதற்கான வேலைகள் 2016 மே மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.* | தற்போது பயன்படுத்தப்படாதுள்ள கேள்வியைச் சிறப்பாகப் பயன்படுத்துவதற்கு சந்தை முகவர்களைத் தூண்டுவதன் ஊடாகத் திரவப் பால் நுகர்வை ஊக்குவித்தல்.<br><br>முறைசாாராத மற்றும் பாரம்பரிய பால் மற்றும் பண்ணைச் சந்தைகளை அடையாளம் கண்டு அச்சந்தைகளை ஒழுங்குபடுத்துவதற்காகப் பயனுறுதி வாய்ந்ததும் பொருத்தமானதுமான சந்தைப் பொறிமுறைகளை அறிமுகப்படுத்துதல்.<br><br>பொது மக்கள் மத்தியில் பசும் பால் நுகர்வை ஊக்குவித்தல்.<br><br>இறக்குமதி செய்யப்பட்ட அதிக பால் தரும் பசுக்களின் கன்றுகளைப் பயன்படுத்தி தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையின் பாற் பண்ணைகளை ஊக்குவித்தல். |

| | | |
|---|---|---|
